சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா :6
பெயர் :மதுமிதா
நாள் : 21.07.2025

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு இரவு 10.00 மணிக்கு சென்றேன். எங்கள் வீட்டிற்கும் அரசு மருத்துவமனைக்கு சுமார் 200 முதல் 300 மீ தூரம் இருக்கும். நான் என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் தனக்கு முன்பே தெரிந்த ரவி மகன் சந்திரமோகன் மற்றும் அவருடன் வந்த நான்கு ஐந்து நபர்கள் அசிங்கமாக திட்டி வெட்டியதாக போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் இருந்து மயிலாடுதுறை காவல் நிலையம் சுமார் அரை கிமீ தூரமிருக்கும். நான் செல்வதற்கு முன்பே போலிசார் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். யாரையும் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பே என் கணவர்மயக்க நிலையில் இருந்தார். நான் போலிசார் சொன்னபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மயிலாடுறை அரசு மருத்துவமனயில் இருந்து தஞ்சாவூருக்கு இரவு 10.15 மணிக்கு புறப்பட்டு சென்றோம். அங்கு காவல் ஆய்வாளர் 12.45 மணிக்கு வந்து சேர்ந்தார். என் கணவரிடம் விசாரித்து புகாரை பெற்றுக்கொண்டார்கள். அதில்என் கணவர் ரேகை வைத்தார். அப்போது நான் என் கணவர் அருகில் தான் இருந்தேன். அப்போது என் கணவர் ஆய்வாளரிடம் தெரியாத நபர்கள் வெட்டியதாக சொல்லியுள்ளார் என்றால் அது சரியல்ல. 2022ல் நடைபெற்ற கண்ணன் கொலை வழக்கில் கலைஞர் காலனியை சேர்ந்த கதிரவன், அஜித்குமார் இன்னும் சிலர் ஈடுபட்டதாக சொல்லியுள்ளேன். எனக்கு அந்த சம்பவம் பற்றி நேரிடையாக தெரியாது. சந்திரமோகன், சந்திரமௌலி, சத்யசீலன், சதீஷ், பாலாஜி, ஸ்ரீராம், நாகராஜ், மோகன்தாஸ் ஆகியோர் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக கேள்விப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பல நபர்கள் ஒன்றுகூடி திட்டமிட்டு பொய்யாக புனைந்துள்ள வழக்கில் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாயை மேட்டிங் செய்வதற்காக அஜித்குமாருடன் என் கணவர் செல்லவில்லை என்றால் சரியல்ல.

M. Madhumitha

**2,4,9,10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை** 

என் கணவர் மயக்க நிலையில் இருந்ததால் ரவி மகன் சந்திரமோகனையும் கூட வந்த ஐந்து ஆறு பேரை தெரியும் என்றார். மறுநாள் மயக்கம் தெளிந்தபிறகு போட்டோக்களை காண்பித்து கேட்டபோது இவர்கள் தான் என்று ஒப்புக்கொண்டார். துரையப்பா தான் வாட்ஸ் ஆப் போட்டோக்களை காண்பித்து கேட்டார் அதற்குள் பேப்பரிலும் செய்தியிலும் வந்துவிட்டது. என் கணவரை போலிசார் முதல் முறை விசாரித்தபோது முழுவிவரங்களையும் சொல்லவில்லை மயக்கமாகிவிட்டார். என்னை முதன்முதலில் விசாரிக்கவில்லை. அதனால் அந்த புகாரில் என்ன எழுதியுள்ளது என்பது எனக்கோ என் கணவருக்கோ சரியாக தெரியாது. மறுநாள் மாலை சுமார் 6.30–7.00 மணிக்குள் துரையப்பா வந்து போட்டோக்களை காண்பித்து விசாரித்தார். அதன்பிறகு தான் எனக்கும் என் கணவருக்கும் தெரியும். என் கணவர் மயக்க நிலையில் இருந்ததால் ரேகை வைத்து பேப்பரில் போலிசார் என்ன எழுதிக்கொண்டார்கள் என்று எனக்கும் என் கணவருக்கும் தெரியாது என்றால் சரிதான். துரையப்பா ஏற்கனவே நடந்த கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர் என்றால் சரிதான். நான் பழைய சம்பவத்தை மனதில் வைத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M. Madhumitha

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

21/7/18

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா :8
பெயர் : பாபு, த/பெ. நாகப்பன்
நாள் : 21.07.2025

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை 20.03.2024 அன்று ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளர் என்னை ஒரு முறைதான் விசாரித்தார் என்றால் சரவணன் ஆய்வாளரிடம் வாக்குமூலம் சொன்னபோது நாங்கள் பக்கத்தில் இருந்தோம். அப்போது எங்கள் தெருவை சேர்ந்த மூன்று பேரை சாட்சிகளாக போட்டிருந்தார் அவர்களையும் என்னையும் விசாரித்தார்கள். அப்போது இரவு 10.00 மணியிருக்கும். மீண்டும் மறுநாள் காலை 9–9.00 மணியளவில் மருத்துவமனையில் வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். அதன்பின்னர் மீண்டும் தெருவில் வந்து அன்றையதினமே மதியம் 12.00 மணியளவில் விசாரித்தார். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் வைத்து இரவு 10.00 மணியளவில் ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தை ஆய்வாளர் பெற்றுக்கொண்டார். சரவணனிடம் அப்போது கைரேகை வாங்கினார்கள். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சொன்னேன். மற்ற சாட்சிகளும் சொன்னார்கள். நான் சொன்னதையும் இதர சாட்சிகள் சொன்னதையும் ஆய்வாளர் எழுதிக்கொண்டார். நானும் மற்ற சாட்சிகளும் அதில் கையொப்பமிட்டோம். நாயை மேட்டிங் செய்ய சென்று திரும்பும் போது சம்பவம் நடந்ததாக முதல் விசாரணையில் சொன்ன சம்பவங்கள் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். கேள்விப்பட்டேன். இவ்வாறு கேள்விப்பட்டதாக சொல்வதும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. அஜித்குமார், சரவணன ஆகியோர் என் தெருக்காரர்கள். அதால் மற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்களும் பல்வேறு நபர்களும் சேர்ந்து ஆலோசித்து உற்பத்தி செய்யப்பட்ட வழக்கில்

நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2,4,9,10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் அசா 1 சரவணனும் அரை மணிநேரம் பேசிக்கொண்டிருந்தோம். அவரின் மனைவி மற்றும் உறவினர்கள் உடனிருந்தார்கள். போலிசார் விசாரித்தபோதும் நாங்கள் அனைவரும் ஒன்றாகத்தான் இருந்தோம். அப்போது சரவணன் சந்திரமோகனை பற்றியோ மற்ற நபர்களை பற்றியோ எதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கண்ணன் தம்பி குரூப் தான் எங்களையும் வெட்டினார்கள் என்று சொன்னார் ஆனால் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் தற்போது சொல்லும் பெயர்கள் கற்பனையாக நானாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் 10 பேர் நின்று பேசிக்கொண்டிருந்தபோது இந்த விவரங்களை கேள்விப்பட்டோம் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா :9
பெயர் : அலெக்ஸாண்டர், த/பெ. ராமமூர்த்தி
நாள் : 21.07.2025

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை அஜித் இறந்த மறுநாள் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். இறந்துபோன அஜித் எனக்கு மைத்துனர் உறவு என்றால் சரிதான். அஜித்குமார் இறந்துபோன சம்பவத்தை நான் இரவு 9.00 மணியளவில் கேள்விப்பட்டேன். நான் உடனடியாக மருத்துவனைக்கு போனேன். நான் போவதற்கு முன்பே போலிசார் அங்கிருந்தனர். அப்போது நான் போலிசாரிடம் முதல் விசாரணையில் சொன்ன எந்த விவரமும் சொல்லவில்லை. மருத்துவமனையில் இருந்து சரவணனை பார்த்து பேசிக்கொண்டிருந்தேன். போலிசாரும் சரவணனிடம் பேசிக்கொண்டிருந்திருக்கலாம். எப்போதாவது கடைத்தெருவில் சந்திரமோகனை பார்த்துள்ளேன் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். கண்ணன் கூட்டாளிகள் கதிரவனை வெட்டிய வழக்கில் நான் சாட்சியல்ல எனக்கு தெரியாது. கண்ணனை கலைஞர் காலனியை சேர்ந்த 22 பேர் கொலை செய்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்பதை கேள்விப்பட்டேன். அந்த 22 பேர் பெயர் எனக்கு நினைவில்லை. கண்ணன் கொலை செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. சந்திரமோகன் வெடிகுண்டு வைத்திருப்பதாக கேள்விப்பட்டு போலிசார் அவரை கைது செய்ததாக சொல்லப்படும் விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. நாயை மேட்டிங் செய்ய சென்றுவிட்டு வரும்போது அஜித்குமார் வெட்டுப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சரவணன் சம்பவத்தை பற்றி என்னிடம் சொல்லி நான் கேள்விப்பட்டதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது நாயை அழைத்து கொண்டு மேட்டிங்

R. Ambr

செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பிறகு கேள்விப்பட்டதாக சொல்லும் விசயங்கள் யாவும் பின் யோசனையின் பேரில் உற்பத்தி செய்யப்பட்டவை என்றும் சரவணன் சம்பவத்தை பற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2,4,9,10 **குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றாலும் அஜித்குமார் என் உறவினர் என்பதால் எங்களுக்குள் இருந்து முன்விரோதத்தை பயன்படுத்தி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

R. Arul

[illegible] முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு [illegible] என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

2/1/7

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை